# ஊட்டி மாரியம்மன் கோவில் சித்திரை தேர்த்திருவிழா: பூச்சொரிதல் நிகழ்ச்சியுடன் இன்று துவங்குகிறது



ஊட்டி மார்ச்.14-

ஒரு மாதம் நடைபெறும் ஊட்டி மாரியம்மன் கோவில் சித்திரை தேர்த்திருவிழா பூச்சொரிதல் நிகழ்ச்சியுடன் இன்று வெள்ளிக்கிழமை துவங்குகிறது. இது குறித்த விவரமாவது-

ஊட்டி நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள மாரியம்மன் திருக்கோவிலின் வருடாந்திர சித்திரை திருத்தேர் திருவிழா நீலகிரி மாவட்ட திருக்கோவில் பணியாளர்களால் நடத்தப்படும் பூச்சொரிதல் நிகழ்ச்சியுடன் இன்று மாலை 6.30 மணிக்கு துவங்குகிறது. அதன்பின்னர் 17-ந் தேதி காப்பு கட்டும் நிகழ்ச்சி நடக்கிறது. தொடர்ந்து 18-ந் தேதி முதல் ஏப்ரல் 18-ந் தேதி வரை நாள்தோறும் ஒவ்வொரு சமுதாயம் மற்றும் ஆன்மீக சங்கங்கள் என உபயதரார்கள் மூலம் மாலை நேரத்தில் தேர்த்திருவிழா நடைபெறும்.

இதில் மாரியம்மன் ஆதி பராசக்தியாக துர்க்கையாக காமாட்சி அம்மனாக ராஜராஜேஸ்வரியாக மகாலட்சுமியாக மாளிகைபுரத்து அம்மனாக ராஜகாளியம்மனாக தையல்நாயகியாக பகவதியாக மகாமாரியாக சரஸ்வதியாக ஹெத்தையம்மனாக பட்டத்தரசியாக கருமாரியம்மனாக மூகாம்பிகையாக சிக்கம்மனாக என தினந்தோறும் ஒவ்வொரு அலங்காரத்தில் புலிவாகனம் கேடயம் ரதம் சிம்மவாகனம் குதிரைவாகனம் உள்ளிட்ட வாகனங்களில் நகர்வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்.

விழாவின் முக்கிய நிகழ்வான திருத்தேரோட்டம் ஏப்ரல் மாதம் 15-ந் தேதி நடக்கிறது.

அதனை முன்னிட்டு 11-ந் தேதியன்று காலை 9 மணிமுதல் 10 மணிக்குள் தேர் முகூர்த்தக்கால் நடும் நிகழ்ச்சியும் 14-ந்தேதியன்று பகல் 12 மணிக்கு தேர் கலசம் ஏற்றும் நிகழ்ச்சியும் நடக்கிறது. 15-ந்தேதி பகல் 1.55 மணிக்கு திருத்தேர் வடம்பிடிக்கும் நிகழ்ச்சி நடக்கிறது.

இதில் மாவட்ட கலெக்டர் காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட அரசுத்துறை உயரதிகாரிகள் அரசியல் தலைவர்கள் முக்கிய பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு திருத்தேரை வடம் பிடித்து துவக்கி வைக்கின்றனர்.

தொடர்ந்து 16-ந்தேதியன்று மஞ்சள் நீராட்டு கொடியிறக்கம் நிகழ்ச்சியும் 18-ந்தேதி விடையாற்றி உற்சவமும் நடக்கிறது.

அருள்மிகு மாரியம்மன் கோவிலில் நடைபெறும் சித்திரை தேர்த்திருவிழாவிற்கான ஏற்பாடுகளை திருக்கோவில் நிர்வாகம் மற்றும் திருக்கோவில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

# கூக்கல், கோடநாடு ஊராட்சிக்குட்பட்ட பகுதி பழங்குடியினர் கிராமத்தில் அடிப்படை வசதிகள்

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் ஆய்வு



ஊட்டி மார்ச்.14-

நீலகிரி மாவட்டம் ஊட்டி ஊராட்சி ஒன்றியம் கூக்கல் ஊராட்சிக்கு உட்பட்ட பிக்கபத்திமந்து மற்றும் கோத்தகிரி ஊராட்சி ஒன்றியம் கோடநாடு ஊராட்சி பேடுக்கல்மந்து கோடுதேன்மந்து ஆகிய பழங்குடியினர் கிராமத்தில் உள்ள அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அவர்களிடம் கோரிக்கைகளை கேட்டறிந்தார்.

முதலாவதாக ஊட்டி ஊராட்சி ஒன்றியம் கூக்கல் ஊராட்சிக்கு உட்பட்ட பிக்கபத்திமந்து பகுதியில் ஆய்வு மேற்கொண்ட போது சமுதாய கூடம் வேண்டும் என பழங்குடியின மக்கள் கோரிக்கையாக முன் வைத்ததன் அடிப்படையில் உடனடியாக ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாய கூடம் கட்டப்படும் எனவும் அதற்கான இடத்தினை தேர்வு செய்யுமாறு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பின்னர் பிக்கபத்திமந்து பகுதியில் ஆய்வு மேற்கொண்டு கொரனூர் முதல் பிக்கபத்திமந்து சாலை 2 கி.மீ தூரத்திற்கு நபார்டு 2024 - 2025 ஆம் நிதி ஆண்டின் கீழ் ரூ.2.23 கோடி மதிப்பில் சிமெண்ட் சாலை அமைத்து தரப்படும் எனவும் இதற்கான பணிகள் அடுத்த வாரம் துவங்கப்படும் எனவும் பழங்குடியினருக்கான 'பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ்'' இப்பகுதியில் 5 வீடுகள் தலா ரூ.4.50 இலட்சம் மதிப்பில் கட்டி தரப்படும் என பழங்குடியினர் மக்களிடம் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து கோத்தகிரி ஊராட்சி ஒன்றியம் கோடநாடு ஊராட்சி பேடுக்கல்மந்து கோடுதேன் மந்து ஆகிய பகுதியில் உள்ள பழங்குடியினர் மக்களை நேரில் சந்தித்த போது கூடுதலாக குடிநீர் குழாய் ஏற்படுத்தி தர வேண்டும் எனவும் மந்து பகுதியில் எருமைகளை பாதுகாக்கும் வகையில் பழுதடைந்து சுற்றுச்சுவரினை சீரமைத்து தர வேண்டும் என இரண்டு கோரிக்கைகளை முன் வைத்ததன் அடிப்படையில் உடனடியாக ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்களுக்கு செய்து தருமாறு அறிவுறுத்தினார்.

மேலும் பி.எம்.ஜென்மம் திட்டத்தின் கீழ் கோடுதேன் மந்து பகுதியில் தலா ரூ.5.73 இலட்சம் மதிப்பில் 5 பழங்குடியினர்களுக்கான வீடுகள் கட்டபப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா ஊட்டி வருவாய் கோட்டாட்சியர் சதீஷ்குமார் வட்டாட்சியர்கள் சங்கர்கணேஷ் (உதகை) ராஜலட்சுமி (கோத்தகிரி) கோத்தகிரி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் விஜயா சுப்பிரமணி ஊட்டி வட்டார வளர்ச்சி அலுவலர் சுரேஷ் உட்பட பலர் உடன் இருந்தனர்.

# ஊட்டியில் சிபிஎஸ் ஒழிப்பு இயக்கத்தினர் ஆர்ப்பாட்டம்



ஊட்டி மார்ச்14-

ஊட்டியில் சிபிஎஸ் ஒழிப்பு இயக்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஒய்வூதிய திட்டம் தொடர்பாக ஆய்வு செய்ய அமைத்த அலுவலர் குழுவை திரும்ப பெற வலியுறுத்தி சிபிஎஸ் ஒழிப்பு இயக்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திமுகவின் சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குறுதி படி புதிய ஒய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து பழைய ஒய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். பணிகொடை வழங்க வேண்டும். குடும்ப ஓய்வூதியம் வழங்க வேண்டும். ஒய்வூதிய திட்டம் தொடர்பாக ஆய்வு செய்ய அமைத்த அலுவலர் குழுவை திரும்ப பெற வலியுறுத்தி சிபிஎஸ் ஒழிப்பு இயக்கம் சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஊட்டி கலெக்டர் அலுவலம் முன்பு நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு சிபிஎஸ் ஒழிப்பு இயக்க மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சரவணன் தலைமை தாங்கினார். தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்க முன்னாள் மாநில துணை தலைவர் சாந்தகுமாரி தொடக்க உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் சிபிஎஸ் மாநில இணை ஒருங்கிணைப்பாளர் விஜயகுமார் சிவகுமார் மணி மேகலை சரளா தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்க மாநில துணை தலைவர் ஆர்.கோவிந்தம்மாள் உட்பட பல பங்கேற்றனர்.கிராம சுகாதார செவிலியர் சங்க நிர்வாகி மணிமேகலை நன்றி கூறினார்.

# வீரப்பன்னாடியோர் மகா சக்தி மாரியம்மன் கோவில் பொங்கல் திருவிழா



ஈரோடு மார்ச் 14-

ஈரோடு மாவட்டம் சுண்ணாம்பு ஓடை சூரிய பாளையம் பகுதியில் அமைந்துள்ள வீரப்பன்னாடியோர் மகா சக்தி விநாயகர் மற்றும் மகா சக்தி மாரியம்மன் திருக்கோவில் பொங்கல் திருவிழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது

இப்பண்டிகை கடந்த மார்ச் மாதம் நான்காம் தேதி பூச்சாட்டுதலுடன் துவங்கப்பட்டு இன்று காவிரி கரையில் இருந்து தீர்த்தம் எடுத்து வரப்பட்டு தீச்சட்டி ஏந்தி, கரகாட்டம் ஆடி, மகாசக்தி மாரியம்மன், மகாசக்தி விநாயகருக்கும் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டது.இதில் ஏராளமான பக்த கோடிகள் பங்கேற்று மகா சக்தி மாரியம்மன் மற்றும் மகா சக்தி விநாயகரை தரிசித்துச் சென்றனர்.

# பவானிசாகர் அணையில் இருந்து தடப்பள்ளி- அரக்கன்கோட்டை பாசனத்திற்கு நீர் திறப்பு நிறுத்தம்

ஈரோடு, மார்ச்.14-

ஈரோடு மாவட்ட மக்களின் முக்கிய குடிநீர் ஆதாரமாகவும், விவசாயிகளின் வாழ்வாதாரமாகவும் உள்ளது பவானிசாகர் அணை. 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையின் முக்கிய நீர் பிடிப்பு பகுதியாக நீலகிரி மலைப்பகுதி உள்ளது. பவானிசாகர் அணையின் மூலம் ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்டங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. இந்நிலையில் கடந்த சில நாட்களாக அணைக்கு வரும் நீர்வரத்தை விட பாசனங்களுக்கு அதிக அளவில் நீர் திறந்து விடப்பட்டு வருகிறது. இதன் காரணமாக அணையின் நீர்மட்டம் குறைந்து வருகிறது.

நேற்று காலை நிலவரப்படி பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 82.58 அடியாக குறைந்துள்ளது. பவானிசாகர் அணைக்கு நேற்று காலை நிலவரப்படி 727 கன அடியாக நீர்வரத்து வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து கீழ்பவானி பாசனத்திற்கு 1,000 கன அடி நீரும்,

குடிநீருக்காக பவானி ஆற்றுக்கு 100 கன அடி நீரும் என மொத்தம் பவானிசாகர் அணையிலிருந்து பாசனத்திற்காக 1, 100 கன அடி நீர் திறக்கப்பட்டு வருகிறது. தடப்பள்ளி -அரக்கன் கோட்டை பாசனத்திற்கு அணையில் இருந்து திறக்கப்பட்ட நீர் நேற்று முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

நேற்று காலை நிலவரப்படி குண்டேரி பள்ளம் அணையின் நீர்மட்டம் 34.83 அடியாக உள்ளது. இதேபோல் வரட்டு பள்ளம் அணையின் நீர்மட்டம் 29.46 அடியாக உள்ளது. 30 அடி கொள்ளளவு கொண்ட பெரும்பள்ளம் அணையின் நீர்மட்டம் 18.63 அடியாக உள்ளது. அணைகளுக்கு நீர்வரத்து குறைந்து வருவதால் நீர்மட்டமும் குறைந்து வருகிறது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

# மாவட்ட கண்காணிப்பு அலகில் இளம் வல்லுநர் பணி: விண்ணப்பிக்க வரும் 23-ந் தேதி கடைசி நாள்

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தகவல்

ஊட்டி மார்ச்.14-

மாவட்ட கண்காணிப்பு அலகில் இளம் வல்லுநர் பணிக்கு மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்க வரும் 23-ந் தேதி கடைசி நாள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து நீலகிரி மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது-

**அறிவிப்பு**

சிறப்பு திட்டச் செயலாக்கத்துறை அரசாணையின் படி மாவட்ட கலெக்டர் தலைமையில் பல்வேறு அரசு திட்டங்களின் விவரங்களை சேகரித்தல் மற்றும் செயலாக்கத்தினை கண்காணிக்க மாவட்ட கண்காணிப்பு அலகு உருவாக்கப்படவுள்ளது. மேற்படி அலகில் இளம் வல்லுநர் பதவிக்கு பின்வரும் தகுதியுடைய நபர்களிடமிருந்து மீண்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

இதற்கான முன்னுரிமை தகுதிகள்:- கணிப்பொறி (அல்லது) தகவல் தொழில்நுட்ப அறிவியலில் இளநிலை பொறியாளர் பட்டப்படிப்புகள் (அல்லது) தரவு அறிவியல் மற்றும் புள்ளிஇயல்; பாடப்பிரிவில் இளங்கலை பட்டப்படிப்புகள் (4 ஆண்டுகள் பட்டப்படிப்பு மட்டுமே) (அல்லது) கணிப்பொறி அறிவியல் , தகவல் தொழில்நுட்ப அறிவியல் , தரவு அறிவியல் , புள்ளிஇயல் மற்றும் தொடர்புடைய முதுநிலை பட்டப்படிப்புகள்.

மேற்படி பணிக்கு வலுவான ஆராய்;ச்சி மற்றும் பகுப்பாய்வு திறன் தரவு பகுப்பாய்வில் தேர்;ச்சி தன்னிச்சையாகவும் குழுவுடனும் இணைந்து பணிப்புரியும் திறன் ஆகியன கட்டாயம். மேற்படி பணியில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இப்பணிக்கு மாதம் ரூ.50000- தொகுப்பு ஊதியமாக வழங்கப்படும். மேற்படி பணிக்கான தங்கள் விண்ணப்பத்தினை னனளழ ழ வ ல@ ப அ யடை. உ ழ அ என்ற மின்னஞ்சல் முகவரிக்கு வரும் 23.03.2025 தேதிக்குள்; அனுப்பபடவேண்டும்.

இது குறித்து மேலும் விவரங்களுக்கு மாவட்ட புள்ளி இயல் துணை இயக்குநர் அலுவலகம் பிளாக்-ஐ ஐஐஇ முதல் தளம் கூடுதல் ஆட்சியர் அலுவலக வளாகம் (அஞ்சல் நிலையம் அருகில்) பிங்கர் போஸ்ட் உதகமண்டலம் - 643 006. கைபேசி எண்கள்: 9445458078 ,9487908820. என்ற முகவரியில் உள்ள அலுவலகத்தை அணுகலாம். இவ்வாறு மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

# ஊட்டியருகே சம்பவம்: தேயிலை பறிக்க சென்ற பெண்ணை வனவிலங்கு தாக்கி கொன்று தின்றதால் பொதுமக்கள் அச்சம்

ஊட்டி மார்ச்.14-

ஊட்டி அருகே தனியார் தோட்டத்தில் தேயிலை பறிக்க சென்ற பெண்ணை வனவிலங்கு தாக்கி கொன்று தின்ற சம்பவம் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

நீலகிரி மாவட்டம் ஊட்டி அருகே உள்ள பேரார் பொம்மன் நகரை சேர்ந்த கோபால் என்பவரது மனைவி அஞ்சலை (வயது 50).

இவர் நேற்று முன்தினம் தேயிலை பறிக்க அருகேயுள்ள காலிபெட்டா என்ற பகுதிக்கு சென்றநிலையில் மாலையில் வீட்டிற்கு திரும்பவில்லை. இதையடுத்து நேற்று முன்தினம் இரவு வரை அஞ்சலையை குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் தேடினர். ஆனால் அவரை கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்தநிலையில் நேற்று காலை அரக்காடு அருகே உள்ள காலிபெட்டா பகுதியில் ஒரு தனியார் தேயிலை தோட்டத்தில் தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்ட போது பெண் ஒருவரை வன விலங்கு தாக்கி கொன்று தேயிலை தோட்டத்திற்குள் இழுத்து சென்று கால் உள்ளிட்ட உடல் உறுப்புகளை சாப்பிட்டு இருப்பதை கண்டனர்.

இதுகுறித்து உடனடியாக ஊட்டி வனத்துறையினருக்கு தகவல் தெரிவிக்கபட்டது. தகவலின்பேரில்; சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த ஊட்டி வடக்கு வனச்சரகர் சசிகுமார் தலைமையிலான வனத்துறையினர் மற்றும் போலீசார் உடலை மீட்டு ஆய்வு செய்தனர்.

இதில் பிணமாக கிடந்தது நேற்று முன்தினம் மாயமான அஞ்சலை என்பது தெரியவந்தது. இதைத்தொடர்ந்து அவருடைய உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு ஊட்டி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இது குறித்து அந்த பகுதி பொதுமக்கள் கூறுகையில் நீலகிரியில் வன விலங்குகள் அடிக்கடி மனிதர்களைத் தாக்குவதும் இதன் காரணமாக மனிதர்கள் காயமடைவதும் அவ்வப்போது உயிரிழப்புகள் ஏற்படுவதும் வழக்கமாகி வருகிறது. ஏற்கனவே கடந்த ரெண்டு வருடங்களுக்கு முன்பு இதே பகுதியில் ஏற்கனவே சிறுத்தை தாக்கி ஒரு உயிரிழப்பு ஏற்பட்டு இருந்தது. தற்போது மீண்டும் இதே போல் ஒரு சம்பவம் நடந்திருப்பதால் இந்த பகுதியில் வேலைக்கு செல்ல பயமாக உள்ளது. என்ன விலங்கு தாக்கியது என்பது குறித்து உடனடியாக கண்டறிந்து வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

இதுகுறித்து வனத்துறையினர் கூறுகையில் அஞ்சலையை தாக்கி கொன்று இழுந்து சென்று சாப்பிட்டது சிறுத்தையா? அல்லது புலியா? என்பதை கண்டறிய அப்பகுதியில் சோதனை செய்து வருகின்றனர். மேலும் அப்பகுதியில் நவீன தானியங்கி கேமராக்கள் பொறுத்தி வன விலங்கை கண்டறியவும் முடிவு செய்து உள்ளதுடன் அந்த பகுதியில் பசுந்தேயிலையை ஞாயிற்று கிழமை வரை பறிக்க யாரும் செல்ல கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டு உள்ளது என்றனர்.

# தி ஐ பவுண்டேஷன் கண் மருத்துவமனை சார்பில் விழிப்புணர்வு மனித சங்கிலி




ஈரோடு மார்ச் :14

ஈரோடு தி ஐ பவுண்டேஷன் கண் மருத்துவமனை மற்றும் கொங்கு கலை மற்றும்அறிவியல் கல்லூரி மற்றும் வெங்கடேஸ்வரா காலேஜ் ஆ,ப் அலைடு ஹெல்த் சயின்ஸ் மாணவ மாணவியர்கள். இணைந்துஉலக குளுக்கோமா வாரத்தை சங்கிலி தி ஐ பவுண்டேஷன் கண் மருத்துவமனையில் நேற்று நடைபெற்றது. மனித இதனை ஈரோடு மேயர் திருமதி நாகரத்தினம் சுப்பிரமணியம் தொடங்கிவைத்தார்.

இது குறித்து தி ஐ பவுண்டேஷன் கண் மருத்துவமனை தலைமை மருத்துவர்கள் அபிராம சுந்தரி மற்றும் சக்தி ராஜேஸ்வரி கூறியதாவது "2013 ஆம் ஆண்டில் உலகளவில் குளுக்கோமா நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 643 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது இது 2020 ஆண்டில் 80 மில்லியனாகவும் அதிகரித்துள்ளது 2040 இல் 118 மில்லியனாகவும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது

இந்தநோயால் பாதிக்கப்பட்ட 90% மேற்பட்டோருக்கு இந்நோய்பற்றி தெரிவதில்லை ஆரம்ப நிலையில் இந்நோய் உள்ளதா என்பதை கண்டறிந்து சிகிச்சை எடுத்துக்கொண்டால் பார்வை பறிபோவதை தடுக்கலாம் இந்தநோயால் 40 வயதிற்கு மேற்பட்டோர் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றனர் இதனால் 40 வயதிற்கு மேற்பட்டோர் வருடம் ஒருமுறை கண் பரிசோதனை செய்வது அவசியம்.

ஈரோடு தி ஐபவுண்டேஷன் கண் மருத்துவமனை பொதுமக்களின் கண் நலனக்காக மார்ச் மாதம் முழுவதும் இலவச கண் பரிசோதனை மற்றும் ஆலோசனை வழங்கப்படும்''

மேலும் இங்கு உலக தரம் வாய்ந்த லாசிக் (ஸ்மைல்) மற்றும் அதி நவீன துல்லிய கண்புரை அறுவை சிகிச்சை (ரோபோட்டிக்) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்றனர்.

இந்த விழிப்புணர்வு மனித சங்கிலியில் ஈரோடு தி ஐ பவுண்டேஷன் சிறப்பு கண் மருத்துவர்கள் விஜய்குமார், சிந்தூரி, மஞ்சுளா, ஷோபனா மற்றும் மேனஜர் கிஷோர், கோவிந்தசாமி, பாபு மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் ரமேஷ், ஆரிதரன் தி ஐ பவுண்டேஷன் கண் மருத்துவமனை ஊழியர்கள், கல்லூரி மாணவ மாணவியர்கள், பேராசிரியர்கள் 250க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# சிறுநீரக தினத்தையொட்டி அபிராமி கிட்னி கேர் மருத்துவமனையில் உறுப்பு தானம் செய்தவர்களை பாராட்டி கவுரவிப்பு




ஈரோடு, மார்ச் 14:

ஈரோடு பெருந்துறை சாலையில் உள்ள அபிராமி கிட்னி கேர் மருத்துவமனையில் ரெட் கிராஸ் அமைப்புடன் இணைந்து நேற்று உலக சிறுநீரக தினம் நேற்று கடைபிடிக்கப்பட்டது. இதில், சிறுநீரகம் மற்றும் உடல் உறுப்புகள் தானமாக வழங்க காரணமான குடும்பத்தினருக்கு பாராட்டு விழா நடந்தது. இவ்விழாவுக்கு அபிராமி கிட்னி கேர் மருத்துவமனை சேர்மேன் டாக்டர் தங்கவேலு தலைமை தாங்கினார். அபிராமி கிட்னி கேர் மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் டாக்டர் சரவணன் முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக ரெட் கிராஸ் மாவட்ட தலைவர் டாக்டர் டிஜி ராமமூர்த்தி கலந்து கொண்டார். தொடர்ந்து, அபிராமி கிட்னி கேர் மருத்துவமனையில் உறுப்பு தானத்திற்கு காரணமாக இருந்த 4 குடும்பங்களுக்கு உறுப்பு தானம் அமைப்பில் இருந்து வழங்கப்பட்ட கேடயங்களை வழங்கி பாராட்டி கவுரவிக்கப்பட்டனர். நிகழ்ச்சியில், சிறுநீரக நோய் குறித்தும், சிறுநீரக தானம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. விழாவில், சசிகலா, ரவி, மருத்துவமனை பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**தமிழகம் 6 ஆண்டுகளாக முதலிடம்**

அபிராமி கிட்னி கேர் மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் டாக்டர் சரவணன் கூறுகையில், தமிழகம் முழுவதும் சிறுநீரகம் பாதிக்கப்பட்ட சுமார் 40 ஆயிரம் பேர் மாற்று சிறுநீரகம் தானமாக பெற, தமிழ்நாடு உடல் உறுப்பு மாற்று ஆணையத்தில் பதிவு செய்துள்ளனர். மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவில் சிறுநீரக தானம் பெறுவது சிரமமாக உள்ளது. இந்தியாவில் 80 சதவீதம் பேர் உறவினர்கள் மூலமும், 20 சதவீதம் பேர் மூளைச்சாவடைந்தவர்கள் மூலம் சிறுநீரகம் மற்றும் உடலுறப்புகள் பெறப்படுகிறது. இது முன்னேறிய நாடுகளில் தலைகீழாக உள்ளது.

ஆனால் உடல் உறுப்பு தானம் வழங்குவதில் தமிழகம் இந்தியாவிலேயே கடந்த 6 ஆண்டுகளாக முதலிடத்தில் உள்ளது.

உடல் உறுப்பு தானம் வழங்குவது சம்பந்தமாக மேலும் விழிப்புணர்வு தேவை என்றார்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# ஈரோட்டில் சிறுநீரக தினத்தையொட்டி விழிப்புணர்வு பேரணி: மாவட்ட முதன்மை நீதிபதி தொடங்கி வைத்தார்



ஈரோடு, மார்ச் 14-

ஈரோட்டில் உலக சிறுநீரக தினத்தையொட்டி ஆர்ஏ என்எம் கிட்னி கேர் மருத்துவமனை சார்பில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. பேரணிக்கு ஆர்ஏஎன் எம் கிட்னி கேர் மருத்துவமனை சிறுநீரக சிறப்பு மருத்துவர் டாக்டர் நாகேந்திரன் தலைமை தாங்கினார். ஈரோடு ஹார்மோரா சர்க்கரை தைராய்டு உடற்பருமன் சிகிச்சை மையம் சிறப்பு மருத்துவர் டாக்டர் பிரியதர்ஷினி முன்னிலை வகித்தார்.

பேரணியை ஈரோடு மாவட்ட முதன்மை நீதிபதி முருகேசன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். பேரணியானது, ஈரோடு சம்பத் நகரில் உள்ள நீதிமன்ற வளாகத்தில் தொடங்கி, சம்பத் நகர் சாலை வழியாக ஆர்ஏ என்எம் கிட்னி கேர் மருத்துவமனையில் நிறைவடைந்தது. பேரணியில், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக் குழு செயலாளர் ஸ்ரீவித்யா, மாவட்ட நீதிபதிகள், ஐஎம்ஏ நிர்வாகிகள் டாக்டர் பார்த்திபன், செயலாளர் நந்தகுமார், ஆர்ஏஎன்எம் கிட்னி கேர் மருத்துவமனை மருத்துவர்கள், ஊழியர்கள், நந்தா அலைடு ஹெல்த் அண்ட் சயின்ஸ் கல்லூரி மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஆற்காட்டில் தி.மு.க. பொதுக்கூட்டம்



ஆற்காடு,மார்ச் 14-

ராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. சார்பில் மத்திய அரசை கண்டித்து கண்டன பொதுக்கூட்டம் ஆற்காடு பேருந்து நிலையத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட செயலாளரும், கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் ஆர்.காந்தி தலைமை வகித்தார்.

ஆற்காடு நகர நிர்வாகிகள் பி.என்.எஸ்.ராஜசேகரன், பொன்.ராஜசேகர், கஜேந்திரன், சொக்கலிங்கம், ரவிக்குமார், ருக்மணி, சிவா, கோபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர செயலாளர் ஏ.வி.சரவணன் வரவேற்றார்.

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட செயலாளரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு, கலந்து கொண்டு மத்திய அரசை கண்டித்து பேசினார். இதில் ஆற்காடு ஜெ.எல்.ஈஸ்வரப்பன்.எம்.எல்.ஏ, மாநில சுற்றுசூழல் அணி துணை செயலாளர் வினோத் காந்தி, தலைமை கழக பேச்சாளர் ரவிசந்திரன், மாவட்ட அவை தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட பொருளாளர் ஏ.வி. சாரதி, மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் பி. என். எஸ். சரவணன், நகரமன்ற தலைவர் தேவிபென்ஸ் பாண்டியன் ஒன்றிய குழு உறுப்பினர் புவனேஸ்வரி சத்தியநாதன் மற்றும் மாவட்ட, நகர,ஒன்றிய நிர்வாகிகள் உள்ளாட்சி பிரிதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# குப்பனத்தம் கிராமத்தில் ரம்ஜான் நோன்பு திறப்பு விழா



செங்கம் மார்ச்14

செங்கம் ஒன்றியம் குப்பனத்தம் கிராம மசூதியில் ரம்ஜான் நோன்பு திறப்பு விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பட்டேல் தஸ்தகீர் தலைமை தாங்கினார். முத்தவல்லி ஜாகீர் முன்னிலை வகித்தார். பொருளாளர் சமியுல்லா வரவேற்று பேசினார். விழாவில் சிறப்பு அழைப்பாளராக செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி கலந்துகொண்டு நோன்பு திறப்பு நிகழ்ச்சியை தொடங்கி வைத்து நோன்பு குறித்து சிறப்பித்து பேசினார்.

உடன் திமுக நிர்வாகிகள் பொதுக்குழு உறுப்பினர் பிரபாகரன் ஒன்றிய செயலாளர்கள் கோலாப்பாடி செந்தில் அந்தனூர் மனோகரன் பிஞ்சூர் ஏழுமலை ராமஜெயம் சம்பத் உள்ளிட்ட நிர்வாகிகள் முஸ்லிம்கள் கலந்து கொண்டனர்

## தி.மலை மாவட்ட ஆட்சியரகம் முன்பு

# ஓய்வூதிய திட்டத்தில் இணைக்க கோரி கிராம ஊராட்சி செயலாளர்கள் ஆர்ப்பாட்டம்



கலசபாக்கம் மார்ச்.14-

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரகம் முன்பு ஓய்வூதிய திட்டத்தில் இணைக்க வலியுறுத்தி தமிழ்நாடு ஊராட்சி செயலாளர்கள் சங்கத்தின் சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் மாவட்ட தலைவர் சீதாராமன் தலைமையில் நேற்று நடந்தது.

மாவட்ட செயலாளர்கள் எம்.ஏழுமலை சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்க ஒன்றிய தலைவர் துரை அனைவரையும் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட மாநில தலைமை நிலைய செயலாளர் சுரேஷ் ஆர்ப்பாட்டத்தில் சிறப்புரையாற்றுகையில் தமிழக ஊரக வளர்ச்சி துறையின்கீழ் சுமார் 12,684 கிராம ஊராட்சிகள் உள்ளன. இதில் 12ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊராட்சி செயலாளர்கள் பணிபுரிகிறோம் முறையான கால முறை ஊதியம் பெற்றுவரும் ஊராட்சி செயலாளர்களை தமிழக அரசின் ஓய்வூதிய திட்டத்தில் இணைக்க வேண்டும் ஒன்றியங்களில் பணியாற்றிவரும் பதிவறை எழுத்தர்களுக்கு வழங்கப்படும் அரசின் சலுகைகளை ஊராட்சி செயலாளர்களுக்கும் விரிவுபடுத்தி அரசாணை வெளியிட வேண்டும் என வலியுறுத்தினார். தொடர்ந்து அவர் பேசும்போது கோரிக்கைளை வலியுறுத்தி தமிழக அரசின் கவனத்துக்கு கொண்டுசெல்லும் வகையில் ஏப்ரல் 4ந்தேதி சென்னை ஊரக வளர்ச்சி ஆணையத்தின் முன்பு பெருந்திரள் முறையீடு இயக்கம் நடத்தவுள்ளோம். வரும் ஏப்ரல் 21ந் தேதி முதல் சென்னை ஊரக வளர்ச்சித் துறை ஆணையத்தின் முன்பு தொடர் காத்திருப்பு போராட்டம் நடத்தவுள்ளோம் என்றார்.இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட பொருளாளர் சுரேஷ் ஊராட்சி செயலாளர்கள் சங்கத்தின் ஒன்றிய தலைவர்கள் அருணகிரி அசோக்குமார் செல்வராஜ் ஒன்றிய செயலாளர்கள் சண்முகம் சீனுவாசன் ஒன்றிய பொருளாளர்கள் சகாதேவன் ஏழுமலை ஆறுமுகம் மற்றும் மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் ஊராட்சி செயலாளர்கள் கலந்துகொண்டனர். முடிவில் ஒன்றிய நிர்வாகி சக்திவேல் நன்றி கூறினார்.

# செங்கம் நிவேதா பள்ளியில் மாதிரி பட்டமளிப்பு விழா




செங்கம் மார்ச்14

செங்கம் அடுத்த முறையாறு கிராமத்தில் உள்ள ஸ்ரீ நிவேதா பள்ளியில் மாதிரி பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பள்ளி செயலாளர் கோபி தலைமை தாங்கினார்.

அறக்கட்டளை தலைவர் நடேசன் நிர்வாகக்குழு இயக்குனர்கள் சபரி சங்கர் நாராயணன் பொருளாளர் ராமஜெயம் நிர்வாக குழு உறுப்பினர்கள் அன்பழகன் ராமஜெயம் பிரசாந்த் கலையரசன் ஆகியோர் எல்கேஜி மற்றும் யுகேஜி மாணவர்களுக்கு பட்டமளித்தனர்.

மாணவர்கள் நன்கு படித்து இந்த மாதிரி பட்டமளிப்பை முன்மாதிரியாக கொண்டு வரும் காலத்தில் உயர் கல்வி படித்து பட்டம் பெற வேண்டும் என வாழ்த்தினர்.

முன்னதாக பள்ளி முதல்வர் ஹேமநாதன் வரவேற்றுப் பேசினார்.

விழாவில் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only



ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா அறிஞர் அண்ணா அரசினர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையின் சார்பில் நடைபெற்றஉலகமகளிர்தினவிழாவில்பெண்குழந்தைகளைகாப்போம்பெண்குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின் கீழ் கல்லூரி மாணவிகள் கலந்து கொண்ட ரங்கோலி கோலம் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழை கலெக்டர் ஜெ.யு. சந்திரகலா வழங்கினார்கள். உடன் மாவட்ட சுகாதார அலுவலர்செந்தில் குமார், துணை இயக்குனர் சுகாதாரம் ராணி மற்றும் பலர் உள்ளனர்.

## மேல்பாலூர் ஊராட்சியில்

# பசுமை தாயகம் சார்பில் 6000 மரக்கன்றுகள் நடும் பணி: சௌமியா அன்புமணி தொடங்கி வைத்தார்



திருவண்ணாமலை, மார்ச்.14-

திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம் தொகுதிக்குட்பட்ட மேல்பாலூர் ஊராட்சியில் பசுமைத் தாயகம் சார்பில் 6000 மரக்கன்றுகள் நடும் பணியை பசுமைத் தாயகம் தலைவர் சௌமியா அன்புமணி நேற்று மரக்கன்றுகள் நட்டு தொடங்கிவைத்தார்.

கலசபாக்கம் தொகுதிக்குட்பட்ட மேல்பாலூர் ஊராட்சியில் பசுமைத் தாயகம் சார்பில் 13 ஏக்கரில் 15ஆயிரம் மரக்கன்றுகள் நட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு முதற்கட்டமாக 6000 மரக்கன்றுகள் நடும் பணிகள் துவக்க விழா நேற்று நடைபெற்றது. இந்த விழாவுக்கு பாமக மேற்கு மாவட்ட செயலாளர் இல.பாண்டியன் தலைமை தாங்கினார்.

மாவட்ட துணை செயலாளர் அருணைஜோதி ஒன்றிய செயலாளர்கள் ப.சங்கர் ப.தங்கராஜ் சே.ஜெயக்குமார் ந.தமிழரசன் ம.ராஜசேகர் சே.சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்க மாவட்ட தலைவர் இரா.பரமசிவம் அனைவரையும் வரவேற்றார்.

விழாவில் பசுமைத் தாயகம் செயலாளர் இரா.அருள் பசுமைத் தாயகம் மாநி துணை செயலாளர் கே.பொன்மலை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அ.கணேஷ்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பசுமைத் தாயகம் தலைவர் சௌமியா அன்புமணி 6000 மரக்கன்றுகள் நடும் பணியை தொடங்கிவைத்து சிறப்புரையாற்றுகையில்

பசுமைத் தாயகம் சார்பில் தமிழகம் முழுவதும் இதுவரை 50 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் மேல்பாலூர் ஊராட்சியில் 15ஆயிரம் மரக்கன்றுகள் நட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு முதற்கட்டமாக மாங்கனி தேக்கு செம்மரம் மகுடம் பாதாம் மூங்கில் நீர் மத்தி புங்கன் தென்னை இலந்தை பலாமரம் வேப்பம் உள்ளிட்ட பல்வேறு வகையான 6000 மரக்கன்றுகள் நடும் பணி இன்றைக்கு தொடங்கி வைக்கப்ட்டுள்ளது இதற்காக இந்த ஊராட்சியை சேர்ந்த இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு நன்றியனை தெரிவித்துக்கொள்கிறேன்.மரங்கள் நட்டால்தான் மழை பெய்தால் நிலத்தடி நீர் உயரும் எனவே இந்த பகுதி பசுமையாக மாற மரங்களை நட்டு காடுகளை வளர்க்க வேண்டும் இன்று அங்கே மரங்கள் நட்டிருப்பது நாளை இந்த பகுதி பசுமையாகவும் சுகாதாரமாகவும் மாறும் எனவே உலக தண்ணீர் தினமான வருகிற 22ந் தேதி அனைத்து ஊராட்சிகளிலும் கிராமசபை கூட்டம் நடைபெறவுள்ளது அப்போது நீர் நிலை பாதுகாக்கவும் ஏரி பாதுகாக்கவும் மலைகளை பாதுகாக்கவும் மரங்களை வளர்க்கவும் தீர்மானம் கொண்டுவரவேண்டும் என்றார்

மேலும் அவர் பேசுகையில் மேல்பாலூர் கூட்ரோடு பகுதியில் இந்த பகுதி மக்களின் கோரிக்கையையேற்று அன்புமணி ராமதாஸ் எம்பி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.8லட்சம் மதிப்பில் ஏப்ரல் மாதம் அரிமாஸ் லைட் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இந்த விழாவில் மாநில மகளிரணி துணை தலைவர் ஜெ.கஸ்தூரி நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் அ.வெ.பிரசாத் ரே.ஜெய்சங்கர் ப.சம்பத் ப.செல்வராஜ் கா.அரிகிருஷ்ணன் கா.கிருஷ்ணமூர்த்தி சுமன் ம.பாலசந்தர் இரா.ராஜபாண்டி ஆ.கோதண்டம் தினகரன் பன்னீர் ராஜா சக்திவேல் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சரஸ்வதி இளங்கோவன் ஒன்றிய துணை செயலாளர் ஆர். கண்ணன் உள்பட பாமக நிர்வாகிகள் உழவர் பேரியக்க நிர்வாகிகள் சமூக ஆர்வலர்கள் சுற்றுசூழல்ஆர்வலர்கள் பெண்கள் பொதுமக்கள் விவசாயிகள் கலந்துகொண்டனர். முடிவில் பி.அருள்தமிழ்குமரன் நன்றி கூறினார்.



தமிழ்நாடு வணிகர் பேரவையின் வேலூர் மாவட்ட பேரவை கூட்டம் மற்றும் நடைபெற உள்ள மாநில மாநாட்டில் கலந்து கொள்வது குறித்து மாநில தலைவர் விக்ரம ராஜா பேசிய போது எடுத்த படம். அருகில் வேலூர் மாவட்ட தலைவர் ஞானவேல், மாவட்ட அமைப்பு செயலாளர் அருண் பிரசாத், மாவட்ட செய்தி தொடர்பாளர் சரவணன், மாவட்ட செயலாளர் குமார் மற்றும் நிர்வாகிகள் கோவிந்தராஜ், ராஜ்குமார், ரமேஷ் குமார், சுந்தரேசன், ரவிச்சந்திரன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

# கடலாடித்தாங்கல் கிராமத்தில் நகரும் நியாய விலைக்கடை: மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்



செஞ்சி மார்ச்-14,

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் வேலந்தாங்கல் ஊராட்சி கடலாடிதாங்கல்கிராமத்தில் செம்மேடுதொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில்நகரும் நியாய விலை கடை தொடக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். ஒன்றிய கவுன்சிலர் அன்னம்மாள் ஆபிரகாம்,ஊராட்சி மன்ற தலைவர் மார்ட்டின் புஷ்பராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.


கூட்டுறவு சங்க செயலாளர் லோகநாதன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு நகரும் நியாய விலை கடையை திறந்து வைத்து குடும்ப அட்டைதாரருக்கு ரேஷன் பொருட்களை வழங்கிசிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன், மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, வார்டு உறுப்பினர்கள் ஆல்பர்ட் குரான்,அந்தோணிசாமி நிர்வாகிகள் ஆபிரகாம், வேலு, செல்வராஜ், சேவியர், புஷ்பநாதன், புஷ்பராஜ்,உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## அம்மனூர் கிராமத்தில்

# காமாட்சிம்பாள் சமேத அம்பிகேஷ்வர சுவாமிக்கு பிரதோஷ வழிபாடு



ராணிப்பேட்டை, மார்ச்.14-

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் தாலுக்காவை சேர்ந்த அம்மனூர் கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ காமாக்ஷியம்பாள் சமேத ஸ்ரீ அம்பிகேஷ்வர சுவாமிக்கு 11 ந் தேதி செவ்வாய் மாலை 5.00 மணிக்கு பிரதோஷ வழிபாடு நடந்தது 12. ந் தேதி புதன்கிழமை மாசி மகத்தை முன்னிட்டு காலை 9.00 மணிக்கு சிறப்பு அபிஷேகமும் அதனையடுத்து மாலை 5-30 மணிக்கு ஆதிகேசவ பெருமாள் ஆலயத்திலிருந்து சீர்வரிசை புறப்பாடு நடந்து தொடர்ந்து திருக்கல்யாண உற்சவமும், மங்கள வாத்தியங்கள் முழங்கவும் பஞ்ச வாத்தியங்கள் முரசொலிக்கவும் வாண வேடிக்கையுடன் மின்விளக்குகளால் ஜொலிக்க சிறப்பான முறையில் திருக்கோயில் குளத்தில் தெப்பல் உற்சவமும் வெகு சிறப்பாக நடந்து முடிந்தது தொடர்ச்சியாக பக்தர்களுக்கு பல வகைகளில் பிரசாதங்களும் வழங்கப்பட்டது

முன்னதாக விழாவிற்கு வந்திருந்த சட்டமன்ற உறுப்பினர் சுரவி அவர்களுக்கு அதிமுக சார்பில் கிளைச் செயலாளர் கே ஆர் சீனிவாசன் வழக்கறிஞர் வைரவ் லட்சுமணன் மற்றும் அரிதிருஷ்ணன் வரவேற்பளித்தனர்

மேலும் சிறப்பு விருந்தினர்களாக ஊராட்சி மன்ற தலைவர் ஜார்ஜ் ஞானவேல் மற்றும் ஒன்றிய குழு உறுப்பினர் அஸ்வினி சுதாகர் பஞ்சாயத்து துணைத் தலைவர் வார்டு உறுப்பினர்கள் ஊராட்சி செயலாளர் மற்றும் பலர் கலந்து கொண்டனர் நிகழ்ச்சி ஏற்பாடுகளில் அம்மனூர் மு.ஊராட்சி மன்ற தலைவர்.தேவவெங்கடரத்தினம், பாபு குருக்கள் மற்றும் பரம்பரை தர்மகர்த்தர்கள் அம்மனூர் கிராம பொது மக்கள், இளைஞர்களும் ஈடுபட்டனர்.

# தொழில்துறை ஆட்டோமேஷனை மறுவரையறை செய்யும் லாரிட்ஸ் நுட்சன் எலக்ட்ரிக்கல் அண்ட் ஆட்டோமேஷன் நிறுவனம்

கோவை, மார்ச் 12-

இந்திய மின்சாரம் மற்றும் ஆட்டோமேஷன் துறையில் முன்னணி நிறுவனமான லாரிட்ஸ் நுட்சன் எலக்ட்ரிக்கல் அன்ட் ஆட்டோமேஷன் (முன்னர் எல் &டி ஸ்விட்ச்கியர்) நிறுவனம், அதன் அடுத்த தலைமுறை ஸ்மார்ட் எரிசக்தி மற்றும் ஆட்டோமேஷன் தீர்வுகளை அறிமுகப்படுத்தியது, இது தொழில் நிறுவனங்களின் ஆற்றல் பயன்பாடு மற்றும் செலவை 30 சதவீதம்வரை குறைக்கும் என்று இந்நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த புதிய தீர்வுகள், தொழில்துறை செயல்முறைகளை மேம்படுத்துவதன் மூலமும், நாட்டின் எரிசக்தி உள்கட்டமைப்பை எதிர்காலத்திற்கு தயார் செய்வதன் மூலமும் இந்தியாவின் கார்பன் வெளியேற்றமில்லா இலக்கை பிரதிபலிக்கும் வகையில் உள்ளன.

ஆட்டோமேஷன், எரிசக்தி மேலாண்மை மற்றும் மென்பொருள் சார்ந்த நுண்ணறிவு ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன், தயாரிப்பு கண்டுபிடிப்புகள், தொழில்துறை நிறுவனங்கள், உதிரி பாகஉற்பத்தி நிறுவனங்களின்மின்சார நுகர்வைக் குறைக்க உதவுகின்றன.

இது குறித்து லாரிட்ஸ் நுட்சன் எலக்ட்ரிக்கல் அன்ட் ஆட்டோமேஷன் தலைமை செயல்பாட்டு அதிகாரி நரேஷ் குமார் கூறுகையில், எங்களின் இந்த புதிய தீர்வுகள் தொழில்துறை மாற்றம் மற்றும் மாசில்லா எரிசக்தி பயன்பாட்டிற்கான'விக்சித் பாரத்' திட்டத்தை பிரதிபலிக்கிறது.

இந்தியாவின் எரிசக்தி மாற்றத்துடன் நோர்டிக் முறையை இணைப்பதன் மூலம், செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தும், உற்பத்தித்திறனை அதிகரிக்கும் மற்றும் நிலையான எதிர்காலத்திற்கான நாட்டின் தொலைநோக்குப் பார்வையை ஆதரிக்கும் தீர்வுகளை நாங்கள் வழங்குகிறோம்.தொழில்நுட்பம், கூட்டாண்மை மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் மூலம், எதிர்காலத்திற்கு ஏற்ற தொழில்துறை சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதோடு, இந்தியாவை உலக அளவில் போட்டித்தன்மையுடைய நாடாக வலுப்படுத்துவோம் என்று தெரிவித்தார். பல ஆண்டுகளுக்கு மேலான நிபுணத்துவமிக்க இந்நிறுவனம் நாள் ஒன்றுக்கு 2 லட்சம் டன் கரும்புகளை அரைப்பதற்குசர்க்கரை ஆலைகளுக்கு மின் ஆற்றலை அளிக்கிறது, அரிசி ஆலைகளுக்கான 8 ஆயிரம் டன்னை அரைப்பதற்கானஆட்டோமேஷன் மற்றும் அதன் அதிநவீன தீர்வுகளுடன் 60 லட்சம் ஜவுளி ஸ்பின்டில்கள் இயக்கம் போன்றவற்றில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

அதன் நம்பகத்தன்மைக்கு அங்கீகாரம் பெற்ற லாரிட்ஸ் நுட்சன் நிறுவனம், 20க்கும் மேற்பட்ட நகராட்சி நிறுவனங்கள், 80க்கும் மேற்பட்ட பெட்ரோ கெமிக்கல் டெர்மினல்கள் மற்றும் 25,000க்கும் மேற்பட்ட மருத்துவமனை படுக்கைகளுக்கும் தங்களது சிறப்பான சேவைகளை வழங்கி வருகிறது. இந்தியாவின் மிகப்பெரிய விமான நிலையங்கள், முன்னணி மருந்து நிறுவனங்கள் மற்றும் 2G எத்தனால் ஆலைகளுக்கு மின்சாரம் வழங்குவதிலும், துறைகள் முழுவதும் செயல்திறன் மற்றும் புதுமைகளை உறுதி செய்வதிலும் இது முக்கிய பங்கு வகிக்கிறது.

மருந்துகள், ரசாயனங்கள், ஜவுளி மற்றும் உலோகங்கள் போன்ற தொழில்களுக்கான நம்பகமான கூட்டாளியான லாரிட்ஸ் நுட்சன் நிறுவனம், இந்நிறுவனங்கள் தங்களின் செயல்திறனை மேம்படுத்தவும் இந்தியாவின் டிஜிட்டல் மாற்றத்தை துரிதப்படுத்தவும் அடுத்த தலைமுறை ஆட்டோமேஷன் தீர்வுகளை அறிமுகம் செய்துள்ளது.

## செம்மேடு சர்க்கரை ஆலை முன்

# தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தினர் கோரிக்கை ஆர்ப்பாட்டம்

செஞ்சி,மார்ச்.14.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை அடுத்துள்ள செம்மேடு தனியார் சர்க்கலை ஆலை முன் தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில் கோரிக்கை ஆர்ப்பாட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கோரிக்கை ஆர்ப்பாட்டத்திற்கு மாநில துணை தலைவர் டி.ஆர்.குண்டுரெட்டியார் தலைமை தாங்கினார். கிளை சங்க செயலர் சுரேஷ்குமார், விநாயகம், சுப்பிரமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில தலைவர் வேல்மாறன், மாவட்ட செயலர் ஆர்.டி.முருகன், செஞ்சி வட்ட தலைவர் கோ.மாதவன், துணைத்தலைவர் நரசிம்மராஜன், இணை செயலர் சம்பத், செயலர் சிவன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

கூட்டத்தில் மத்திய அரசு ஒரு டன் கரும்புக்கு ஆதார விலை ரூ 5500 வழங்க வேண்டும், தமிழக அரசே வரும் சட்டமன்ற கூட்டத்தொடரில் வருவாய் பகிர்வு சட்டத்தை ரத்து செய்து மாநில அரசின் பரிந்துரை விலையை அறிவிக்க வேண்டும். மாநில சர்க்கரை துறையே விழுப்புரம் முண்டியம்பாக்கம் ராஜஸ்ரீசர்க்கரை ஆலை 2004, 2005 மற்றும் 2008, 2009 கரும்பு விவசாயிகளுக்கு சேரவேண்டிய லாபத்தின் பங்கு தொகையினை விரைவில் வழங்கிட நீதி மன்றத்தின் உத்தரவுபட நடவடிக்கை எடுக்க கோரி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

செம்மேடு சர்க்கரை ஆலை சங்க நிர்வாகிகள் சபாபதி, துரைசாமி, சேகர், எத்திராஜ், சக்திவேல், ஏழுமலை, சங்கர், வெங்கடேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

